# சாளரம்

# Chāḷaram

சித்திரை – ஆடி April - July 2016
ஒளி-09 கீற்று- 02

இது ஒரு எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் தயாரிப்பு.

© Essex Tamil Society 2016

அன்பான பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் எமது வணக்கம். கடந்த தவணையின் போது இனிதே இடம்பெற்ற பரிசளிப்பு வைபவத்தில் எமக்கு ஒத்துழைப்பு நல்கிய எல்லா நல்ல உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இன்று தொடங்கும் இந்தத் தவணை மாணவர்களுக்குப் பரீட்சைகளுக்கான தவணை. பாடசாலைகளின் ஆண்டு இறுதிப் பரீட்சை, GCSE (O Level), GCSE (A Level), அனைத்துலகத் தமிழ் தேர்வு, இதனிடையே Music, பரதநாட்டியம் 11+ ஆகியப் பரீட்சைகள் என்று மாணவர்களுக்கும் சரி, பெற்றோர்களுக்கும் சரி மிகவும் கடுமையான பரபரப்பான தவணையாக இருக்க உள்ளது. அண்மைய கருத்துக் கணிப்புகளின்படி இலண்டனில் பரீட்சைகளில் முதலிடத்தைப் பெறுபவர்கள் சீன இனத்தவர்கள் என்றும், இரண்டாம் இடத்தையே தமிழர் பெற்றிருக்கிறோம் என்றும் அறிகின்றோம். படிப்பில் போட்டியிருப்பது தேவை; அது பொறாமையாக மாறக்கூடாது. பொறாமை என்பது வாழ்க்கையின் வீழ்ச்சிக்கான அடிக்கல் என்பது நாம் காணும் உண்மை. இந்தத் தவணயையில் இடம்பெற இருக்கும் அனைத்துலகத் தமிழ்த் தேர்விற்கான விண்ணப்பப் படிவத்தை எமது இணையத்தளத்தில் பிரசுரித்துள்ளோம். தயவு செய்து பெற்றோர்கள் அந்த விண்ணப்பப் படிவத்தைப் பிரதிசெய்து அத்துடன் பரீட்சைக்கான கட்டணத்தையும் இணைத்து எமது தமிழ்ப் பாடசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம். இந்தத் தவணையில், கடந்த ஆண்டுகளில் இடம்பெற்ற பரீட்சை வினாத்தாள்கள் ஆசிரியர்களால் பயிற்றுவிக்கப்படுவதால், தயவு செய்து அனைத்து மாணவர்களும் தமிழ்ப் பாடசாலைக்குத் தவறாது வருகை தந்து இவ்வாண்டுப் பரீட்சையிலும் கடந்த ஆண்டுகளைப் போல அதிகூடிய சித்திகளைப் பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். தமிழ்ப் பாடசாலயையில் இடம்பெறும் மற்றைய கலைப்பாடங்களான வயலின், மிருதங்கம், பரதநாட்டியம், Keyboard வகுப்புக்களில் மாணவர்கள் சேர்ந்து உங்களின் கலை வளர்ச்சியில் முன்னேற வேண்டும் என்பது எமது தாழ்மையான வேண்டுகோள். பெற்றோர்களுக்கு இலவச யோகா வகுப்புக்கள் ஒழுங்காக நல்ல நெறியாள்கையில் பயிற்றுவிக்கப்படுகின்றன. இந்த இலவச வகுப்புக்களில் கலந்து நீங்கள் பயன்பெற வேண்டும். இப்படியான இலவச வகுப்புக்கள் உங்களுக்கு வேறெங்கும் கிடைக்காது. எனவே தயவு செய்து அனைத்துப் பெற்றொர்களும் கலந்து பயனடைய வேண்டுகின்றோம். விவேகானந்த சபையினரால் நடாத்தப்படும் சைவ சமயப் பாடப் பரீட்சைகள் எதிர்வரும் Novemberஇல் நடை பெற உள்ளன. சமய பாடத்திற்கான வகுப்புக்கள் இலவசமாக நடத்தப்படுவதால் மாணவர்களுக்கு உற்சாகமளித்து அந்தப் பரீட்சையிலும் பங்குகொள்ளுமாறு வேண்டுகின்றோம். மாணவர்களுக்கான வாசிப்புத்திறனைக் கூட்டுவதற்காகத் தமிழ் நூல்கள் பல உள்ளன. பெற்றோர்களே! இத்திட்டத்தில் உங்கள் பிள்ளைகளையும் சேர்த்து அவர்களின் வாசிப்புத் திறனைக் கூட்டுமாறு தாழ்மையாக வேண்டுகின்றோம். அதற்கான விண்ணப்பப்படிவங்களை எமது காரியாலயத்தில் £3.00 செலுத்திப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். இறுதியாக எமது தமிழ்ப் பாடசாலைக் கட்டணங்களைத் தயவு செய்து தவணை ஆரம்பித்து முதல் மூன்று வாரங்களுக்குள் செலுத்தி எமக்கு ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றோம்.

## இந்தத் தவணைக்கான பாடசாலை நாட்கள்

| | |
|---|---|
| 15.04.2016 | தவணைக்கான பாடசாலை ஆரம்ப நாள் (Start of Academic Term) |
| 22.04.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 29.04.2016 | மாதாந்தப் பரீட்சைகள் (Monthly Examinations) |
| 06.05.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 13.05.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 20.05.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 27.05.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 28.05.2016 | அனைத்துலகத் தமிழ்மொழித் தேர்வு 2015-2016 (International Tamil End of Academic Year 2015-2016 Examinations) |
| 03.06.2016 | பாடசாலை இடைத்தவணை விடுமுறை (Half-Term Holidays) |
| 10.06.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 17.06.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 24.06.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 01.07.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 08.07.2016 | வெள்ளிக்கிழமை (Normal School Friday) |
| 15.07.2016 | தவணைக்கான பாடசாலை இறுதி நாள் (End of Academic Term) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் வாக்கு யாருக்கு?

வெண்ணெய், வெல்லச்சீடை, தேன்குழல், முறுக்கு, வடை, பொங்கல் என்று உடலுக்கு, உடல் பருமனுக்கு எதிரியான பல வகை உணவுப் பொருட்களை எடுத்துத் தந்தாள் மனைவி. என்ன விசேடம் என்றேன். இன்று கிருஷ்ண ஜெயந்தி என்றாள். கிருஷ்ண ஜெயந்தியை ஆனந்தமான தின்பண்டப் பண்டிகையாக இந்துக்கள் கொண்டாடுகிறார்களே தவிர அது கண்ணனின் அவதார நோக்கம், அக்கிரமமும், அநியாயமும் எங்கே நிகழ்ந்தாலும் அதை அழித்துத் தர்மத்தை நிலைநாட்டும் தர்மவான், அறன் நிலை நிறுத்த வந்த அண்ணலே கண்ணன் என்பதை மறந்து விடுகிறார்கள். மாறாகக் கண்ணன் கபட நாடகச் சூத்திரதாரி, சூழ்சிகள் செய்தவன், அதர்ம வழியில் துரியோதனனைக் கொன்றவன் என்று கண்ணனைக் குற்றம் சாட்டுபவர்கள் பலர்.

கெட்டவர்கள், அயோக்கியர்கள், நயவஞ்சகர்கள், நன்றிமறந்தவர்கள், நண்பனைப்போலப் பழகிக் கழுத்தறுப்பவர்கள் எவ்வளவு கெட்டவர்களாக, அக்கிரமம் செய்தாலும் நம் மக்கள் சும்மா இருப்பார்கள். ஆனால் மேலே சொன்ன அயோக்கியர்களை அழிக்கப் புறப்படுவர்களை மட்டும் பூதக்கண்ணாடி வைத்துப் பார்த்து நம் மக்கள் குறை சொல்லுகிறார்கள். அக்கிரமக்காரர்களை அழிப்பதற்கு நல்லவர்கள் கொஞ்சம் முறை மாற்றிப் பலத்தைப் பயன்படுத்தினாலும் "அநீதி, அக்கிரமம்" என்று புத்திஜீவிகள் அலறுகிறார்கள். அதாவது அயோக்கியன் நூறு சத விகிதம் அயோக்கியனாகவே இருப்பானாம். அவனை அடக்குபவன் நூறு சதவிகிதம் நல்லவனாகவே இருக்க வேண்டுமாம். அத்தோடு அயோக்கியரை ஜெயிக்கவும் வேண்டுமாம். இது எப்படியான ஒரு மடைத்தனம்? ஒரு போதும் அதர்மம் அழிந்து விடக்கூடாது என்றே புத்திஜீவிகள் எதிர்பார்ப்பதாகவே எனக்குத் தோன்றுகின்றது.

தர்மத்தை நிலைநாட்ட விரும்புகிறவர்கள் நூறு சதவிகித தர்மவான்களக இருக்க வேண்டும் என்கிற எண்ணம் கொள்கையளவில் சரி. ஆனால் நடைமுறையில் சாத்தியமா? ஒருவழிப் பாதையில் காரை எண்பது கி.மீ வேகத்தில் ஓட்டும் ஒருவனைப் போலீஸ் பிடிப்பது அதர்மமா? அனுமதிக்கப்பட்ட அதர்மம். அது தான் கிருஷ்ன லீலை. அதர்மமே உருவான துரியோதனனை வீழ்த்தக் குறைந்த பட்ச அநீதிகளைக் கண்ணன் கையாளவே செய்கிறான். கர்ணன், துரோணர், பீஷ்மர் போன்ற அன்பானவர்களைப் பிரித்துத் துரியோதனனை ஆதரவற்றவனாக நிறுத்துகின்றான். ஜயத்ரதன் என்ற அற்பனை அழிக்கத் தன் சக்கரத்தால் சூரியனை மறைக்கிறான். இவையெல்லாம் முறையற்றவைதான்.

வன்முறைக்கும்பலை, பொய்யரை, சூழ்ச்சிக்காரரை, கொலைகாரப்பாவியரை அடக்கப் போலீஸ் படை சுட்டால் அது சட்டத்தின் வன்முறை. சுட்டபூர்வமான கொலை அனுமதிக்கப்பட்ட அநீதி. இரண்டும் கொலைதானே என்று பேசினால் அரசு, படை, காவல்துறை, காவலர்களுக்குத் துப்பாக்கி எல்லாம் எதற்கு?

பிறரைக் கொலை செய்யக் கூடாது என்று அகிம்சையைப் பேசிய காந்திஅடிகள் எதற்கெடுத்தாலும் உண்ணாவிரதம் என்ற தற்கொலைக்கு வரிந்து கட்டியது அகிம்சை இல்லையா? கத்தியின் கூர்மை எதிரிநெஞ்சில் என்றால் கொலை. தன் நெஞ்சில் என்றால் தற்கொலை. எப்படியும் இரண்டும் கொலைதானே. இரண்டும் அதர்மம் தானே.

எனவே தர்மத்திற்குக் காந்தி தனக்கேற்ப விளக்கம் கொடுத்தார். கண்ணன் தமக்கேற்ற விளக்கம் தருகிறார். அதர்மம் செய்பவனை நூற்றுக்கு நூறு விகிதம் தர்மமாகவே எதிர்த்துப் பார். அது சாத்தியம் இல்லை என்றால் குறைந்த பட்ச அதர்மத்தைக் கொண்டு அதிகபட்ச அதர்மத்தை அழிக்கப் பார். இதுவே கண்ணன் காட்டிய வழி.

இனி வருகிற காலத்தில் கண்ணன் காட்டிய வழியில்தான் அநீதிகளை எதிர்க்க முடியும். காந்தியம் பேசிக்கொண்டிருந்தால் பாரீஸ் (Paris) ப்ரசில்ஸ் (Brussels) போன்ற நகரங்களில் அண்மையில் இடம்பெற்ற கொலைகள், பெருகிக்கொண்டே போகும்.

நல்லதை நடத்தக் கொஞ்சம் முன் பின்னாக நடந்தாலும் குற்றம் இல்லை. காந்தியும் கண்ணனும் என்தொகுதியில் தேர்தலுக்கு நின்றால் எனது வாக்குக் கண்ணனுக்கே. கண்டிப்பாகக் காந்திக்கு அல்ல. உங்கள் வாக்கு யாருக்கு?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





**Essex Tamil Society's Awards Ceremony 2016**




**எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் பரிசளிப்பு விழா 2016**








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org























Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்

எமது 17ஆவது ஆண்டுப் பரிசளிப்பு விழாவிற்கு பல வழிகளிலும் பெற்றோர்கள், கழக உறுப்பினர்கள் உதவிகள் செய்துள்ளனர்.

நிதி உதவி வழங்கிய பெற்றோர்கள், உணவுப் பொருட்களைத் தயாரித்துத் தந்துவிய அனைத்து ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்கள்.

பரிசளிப்பு வைபவத்திற்குத் தேவையான பரிசுகளுக்கு நிதியுதவி வழங்கிய MSR Group உரிமையாளர் திரு ரூபன் அவர்களுக்கு எமது நன்றிகள்.

புகைப்படங்கள் எடுத்து உதவிய திரு பிரபாகரன், திரு சிங்காரவேலு அவர்களுக்கு நன்றிகள்.

வாழ்நாள் சாதனை விருது வழங்கலுக்கு பெரிதும் உதவிய திரு சிறீக்கந்தராசாவுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இன்னமும் திரைமறைவில் இருந்து கழக வெற்றிக்கும், வளர்ச்சிக்கும் பாடுபடும் அனைவருக்கும் நன்றிகள்.

## எசெக்ஸ் தமிழ் அக்கடமியின் 17ஆவது பரிசளிப்பு விழா

ஒவ்வொரு வருடமும் எமது தமிழ்ப் பாடசாலை ஆரம்ப நாளை மையமாக வைத்துத் தமிழ்த் திறன் போட்டியும் பரிசளிப்பு வைபவமும் நடைபெறுவது யாவரும் அறிந்ததே.

இவ்வாண்டும் March மாதம் 13ஆம் திகதி எமது பரிசளிப்பு விழா Ilford Ursuline பாடசாலை மண்டபத்தில் மண்டபம் நிறைந்த பார்வையாளர்கள் மத்தியில் இனிதே நடைபெற்றது. விழா மாலை 4.00மணிக்கு மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. மங்கல விளக்கேற்றலை பெற்றோர்களான திரு திருமதி மதியுகநாதன் ஏற்றி ஆரம்பித்து வைத்தார்கள்.

விழாவிற்கு விசேட விருந்தினர்களாகச் சட்டத்தரணி திரு சிதம்பரப்பிள்ளை திருமதி சிதம்பரப்பிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

தமிழ்த் திறன் பேச்சுப் போட்டிகளில் முதலிடத்தைப் பெற்ற மாணவர்களின் பேச்சுக்கள், சிறுவர் நடனங்கள், நாடகங்கள், பரதநாட்டியம், மிருதங்க வாத்திய சங்கமம், மற்றும் மேற்பிரிவு மாணவர்களின் நாடகம் எனப் பல நிகழ்ச்சிகள் அடுத்தடுத்து இடம்பெற்றன. மாணவர்கள் தமது திறமைகளை நன்றே வெளிக் காட்டினார்கள்.

பெற்றோர்கள், ஆசிரியர்கள், மற்றும் எசெக்ஸ் கழக உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நிகழ்ச்சிகளை நடாத்தினார்கள்.

விழாவின் மத்தியில் எமது கழகத்தால் ஆண்டு தோறும் நடாத்தப்படும் வாழ்நாள் சாதனைவிருது வழங்கலும் இடம்பெற்றது. இவ்வாண்டு வாழ்நாள் சாதனை விருது இலண்டனில் சைவமுன்னேற்றச்சங்கத்தை ஆரம்பித்து கடந்த நாற்பது ஆண்டுகளாகத் திறம்பட நடாத்திவரும் திரு இராமநாதனுக்குச் **சிவத்தமிழ் நம்பி** என்ற கவுரவப் பட்டம் வழங்கி எமது கழகம் மகிழ்வுற்றது. விழாவிற்கு ஒலிஅமைப்புச் செய்த திரு பாஸ்கரனுக்கும், நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்து அறிவிப்பாளராகக் கடைமையாற்றிய திருமதி ஜெகமோகனுக்கும் எமது நன்றிகள். நிகழ்ச்சிகள் அனைத்தும் மாலை ஒன்பது மணிக்கு இனிதே நிறைவு பெற்றன. பரிசளிப்பு விழாவின் படங்கள் இந்தச் சாளரத்தில் வெளிவந்துள்ளன. பெற்றோர்களே! இப்படங்கள் உங்களுக்குத் தேவைப்படின் தயவு செய்து எமது காரியாலயத்தைத் தொடர்பு கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எசெக்ஸ் தமிழ்க் அக்கடமி

## ESSEX TAMIL ACADEMY

64 Glencoe Avenue, Ilford, Essex IG2 7AN
Tel: 020 8599 8191 Fax: 020 8599 8191
E-mail: etsociety@hotmail.co.uk
Website : www.essextamilsociety.com

எமது தமிழ்ப் பாடசாலையான எசெக்ஸ் தமிழ் அக்கடமியில் வளர்நிலை 1-12 வரையும் அனைத்துலகத் தமிழ்வழி பொதுத் தேர்வுப் பரீட்சைக்கு மாணவர்கள் தயார்படுத்தப் பட்டு முதன்மைச் சித்தி பெறுகிறார்கள்.





வருடந்தோறும் November மாதத்தில் **விவேகானந்த சபையின் சைவ நெறிப் பரீட்சைக்கு** மாணவர்கள் தயார் படுத்தப்படுகிறார்கள். வகுப்புக்களில் மாணவர்களுக்குத் தேவாரப் பண்ணிசையும், சைவசமயப் பரீட்சைக்குத் தேவையான பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.


எசெக்ஸ் தமிழ்க் கழகம் வருடந்தோறும் விளையாட்டுப் போட்டியை நடாத்தித் தமிழ்ப் பாடசாலைப் பிள்ளைகளை **விளையாட்டுப் போட்டிகளில்** ஊக்குவிக்கிறது. உங்கள் பிள்ளைகளின் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழ்ப் பாடசாலை அனுமதிக்கும் தயவு செய்து **020 8559 8191** உடன் தொடர்பு கொள்ளவும்.





எசெக்ஸ் தமிழ் அக்கடமி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் மாலை 5:00 மணி முதல் மாலை 08:30 மணிவரை **தமிழ், நடனம், வயலின், மிருதங்கம், Keyboard,** வகுப்புக்கள் **Newbury Park Primary School, Perrymans Farm Road, Ilford** இல் கடந்த 17 ஆண்டுகளாள நடைபெற்று வருகின்றன.

மாணவர்கள் UCAS points எடுத்து University அனுமதி பெற உதவுகின்றது **தமிழ்மொழி Cambridge University** பரீட்சைக்கு ஆண்டு தோறும் மாணவர்களைத் தயார்செய்து “A*” தரச்சித்தி பெற வழிவகுக்கின்றது.



உங்கள் பிள்ளைகளின் அனுமதிக்கு மேற்காணும் தொலைபேசி எண் அல்லது மின் அஞ்சலில் தொடர்பு கொள்ளவும். மேலதிக விபரங்களை www.essextamilsociety.com என்ற இணையதளத்தில் பார்க்கலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**இது ஒரு எசெக்ஸ் தமிழ்க் கழகத்தின் தயாரிப்பு.**

© Essex Tamil Society 2016